**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.3**
**M.C.O.P.No. 653/2019**

| | | |
|---|---|---|
| **Name** | : | திருநாவுக்கரசு |
| **Father/Husband Name** | : | பெருமாள் |
| **Age** | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.02.2026**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் : 12.50 P.M.

முதல் விசாரணை

நான் மனுதாரர் தரப்பில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியம் அளிக்க நீதிமனற்திலிருந்து அழைப்பாணை வந்தது. நான் தற்போது அரசு மேல் நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக சயினபுரத்தில் பணியாற்றி வருகிறேன். எங்கள் பள்ளியில் ஹரிதாஸ் என்பவர் பட்டதாரி ஆசிரியர் சமூக அறிவியல் ஆசிரியாக பணியாற்றி வந்தார். அந்த ஹரிதாஸ் மோட்டார் வாகன விபத்தில் இறந்துவிட்டாக கேள்விப்பட்டேன். இறக்கும்போது அவருக்கு 45 வயது.

ஹரிதாஸ் இறக்கும்போது பள்ளியில் அவருக்கு மொத்த சம்பளம் ரூ.53,376/– ஆகும். அவர் உயிருடன் இருந்திருந்தால் 2035 வரை சுமார் 15 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார். அந்த 15 வருடங்களில் அவரின் ஊதிய உயர்வு கிடைத்திருக்கும் என்றால் சரிதான். சுமார் எவ்வளவு ஊதிய உயர்வு கிடைத்திருக்கும் என்றால் சரிதான். ஆறு மாதத்திற்கு ஒரு முறை DA உயர்வும், ஆண்டு சம்பள உயர்வும் கிடைத்திருக்கும்.

எங்கள் பள்ளியிலிருந்து சம்பள சான்றிதழ் எங்கள் அலுவலக பதிவேடுகளை பார்த்து தயாரித்து கொண்டு வந்துள்ளேன். அது ஆகஸ்டு 2019 க்கானது. அந்த சம்பள பட்டியில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த சம்பள பட்டியல் ம.சா.ஆ.10** ஆகும்.

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்துபோன ஹரிதாஸ் எங்கள் பள்ளியில் 2014 ல் பணிக்கு சேர்ந்ததார். அவர் சேரும்போதே பட்டாதாரி ஆசிரியராக சமூக அறிவியலாக பணியில் சேர்ந்தார். நான் தாக்கல் செய்துள்ள சம்பள பட்டியலின்படி பிடித்தம் போக ரூ.47,548/- கைக்கு வரும். அந்த பிடித்தத்தில் வருமான வரியும் அடக்கம். இறந்துபோன ஹரிதாஸ் என் நண்பர் அல்ல என்னுடன் பணிபுரிந்தவர்.

விசாரணை முடிந்த நேரம் : 01.00 a.m.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2026.02.06 18:09:32 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.